**- அறிவித்தல் -**

# தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## தென் மாகாண தொழிநுட்ப சேவையில் (வரைபடக் கலைஞர்) IIIஆம் தரத்தின் / பயிலுனர் தரத்தின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025

1.0 தென் மாகாண தொழிநுட்ப சேவையின் (வரைபடக் கலைஞர்) IIIஆம் தரத்தின் பயிலுனர் தரத்தின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சையானது, தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் **2025 நவம்பர/டிசம்பர்** மாதம் நடாத்தப்படவுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அதற்கான விண்ணப்பப்படிவங்கள் தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் **www.psc.sp.gov.lk** இணையத்திளத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்கள் நிகழ்நிலை (online) முறையில் மட்டுமே அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதி 2025 ஒக்டோபர் மாதம் 24ஆந் திகதி ஆகும்.

**குறிப்பு 01** :- இணையவழி ஊடாக விண்ணப்பப்படிவங்கள் பொறுப்பேற்கப்படும் செயற்பாடானது 2025 ஒக்டோபர் மாதம் 03ஆந் திகதி மு.ப.9.00 மணிக்கு திறக்கப்படும் என்பதுடன், 2025 ஒக்டோபர் மாதம் 24ஆந் திகதி பி.ப.6.00 மணிக்கு முடிவடையும்.

இந்தப் பரீட்சையானது காலி, மாத்தறை, தங்காலை ஆகிய நகரங்களில் அமைக்கப்படவுள்ள பரீட்சை மத்திய நிலையங்களில் மட்டும் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அனைத்து விண்ணப்பதாரிகளும் அந்த நகரங்களின் அடிப்படையில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கப்படும் நகரமாகத் தெரிவு செய்ய வேண்டியது, விண்ணப்பதாரர்கள் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்ட மாவட்டத்தில் மேலே குறிப்பிடப்பட்ட நகரத்தினை மட்டும் தெரிவு செய்தல் வேண்டும். நிகழ்நிலையில் விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்யும்போது பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கப்படும் நகரத்தை சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். பரீட்சைக்குத் தெரிவு செய்யும் நகரத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. ஏதேனும் ஒரு நகரத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்குப் போதுமான பரீட்சார்த்திகள் எண்ணிக்கை இல்லாது போனால், பரீட்சை நடாத்தப்படும் நகரம் அல்லது நகரங்கள் தொடர்பில் ஆணைக்குழுவினால் தீர்மானங்கள் எடுக்கப்படும்.

2.0 தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் எழுத்துமூலப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில், திறமை அடிப்படையில், தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள், தொழிநுட்ப சேவையின் (வரைபடக் கலைஞர்) III தரத்தின் / பயிலுனர் தரத்தின் பதவிகளுக்கு நியமிப்புச் செய்வதற்கு தெரிவு செய்யப்படுவர்.

**3.0 (அ) நிரப்புவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை 03 ஆகும்.**

(ஆ) நியமிக்கப்படுகின்ற எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி என்பன, நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

(இ) அரச சேவையில் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொதுவான நிபந்தனைகளுக்கும், இலக்கம் 222 மற்றும் 2017.05.24ஆந் திகதிய தென் மாகாண கௌரவ ஆளுநரால் அனுமதிக்கப்பட்ட தென் மாகாண அரசாங்க சேவையின் தொழிநுட்ப சேவை தொடர்பான பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அந்த பிரமாணக் குறிப்புகளுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கும், தாபன விதிக்கோவையினதும் நிதிப்

பிரமாணத்தினதும் / தென் மாகாண நிதி நடைமுறை ஏற்பாடுகளுக்கும், இலக்கம் 2310/29 மற்றும் 2022.12.14ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் அமைய, தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் தொழிநுட்ப சேவையின் (வரைபடக் கலைஞர்) III தரத்திற்கு / பயிலுனர் தரத்திற்கு நியமிக்கப்படுவார்.

(ஈ) நியமனத்திற்காகத் தெரிவுசெய்யப்பட்டால், முதல் நியமனம் கிடைக்கப்பெற்ற சேவை நிலையத்தில் ஆகக்குறைந்தது மூன்று வருடங்கள்(03) கட்டாயம் சேவையாற்றுதல் வேண்டும். எவ்வாறாயினும், நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படுகின்ற ஏதேனும் விசேட காரணங்களினால் அந்தக் காலம் முடிவடைவதற்கு முன்னர் எவரேனும் உத்தியோகத்தரை மாற்றுவதற்கு அவசியம் ஏற்படின், நியமன அதிகாரிக்கு அதற்கான அதிகாரம் உண்டு.

(உ) இந்த நியமனமானது மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. தொழிநுட்ப சேவையின் (வரைபடக் கலைஞர்) III தரத்தின் பதவியொன்றிற்கு நியமனம் பெற்று மூன்று வருடத்திற்குள்(03) சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(ஊ) நியமனத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டால் நீங்கள் நியமனத்திற்கான தகைமைகளை பூர்த்தி செய்த மொழி மூலத்திற்கமைய 2020.10.16 ஆம் திகதியிட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதற்கு இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளில் குறிப்பிட்ட ஏற்பாடுகளுக்கமைய தங்களால் ஏற்புடையவாறு அரச கரும மொழி தேர்ச்சியை பூர்த்தி செய்தல் வேண்டும். மேலும் மொழித் தேர்ச்சி தொடர்பாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நடபடிமுறைகளின் ஏற்பாடுகளும் உள்ளடங்கும்.

4.0 சம்பளம் :-

(அ) III தரத்தின் பதவிக்குரிய சம்பளம்

2025.03.25 ஆந் திகதிய மற்றும் இலக்கம் 10/2025 ஐக் கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இலக்கம் MN - 03 சம்பள குறியீடு இந்தப் பதவிக்கு உரித்தாகும் என்பதுடன், அதற்குரிய சம்பள அளவுத்திட்டம் 52,250 - 10 x 800 - 11 x 1,190 - 10 x 1,320 - 10 x 1,350 - 100,040/- என்பதுடன், அந்தச் சம்பளமானது 2027.01.01 ஆந் திகதி தொடக்கம் உங்களுக்கு உரித்தாகும். நியமனம் செயல்வலுப்பெறும் திகதி தொடக்கம் உங்களுக்கு இச் சுற்றிக்கையின் உபஅட்டவணை IIIஇல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் சம்பளம் கொடுப்பனவு செய்யப்படும்.

(ஆ) மேற்கண்ட சுற்றறிக்கைக்கமைய தென் மாகாண தொழிநுட்ப சேவையின் பயிற்சி பெற்ற தரத்திற்கு உரிய மாதாந்தக் கொடுப்பனவு கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருடம் | மாதாந்தக் கொடுப்பனவு | | |
|---|---|---|---|
| | 2025.04.01 ஆந் திகதி தொடக்கம் (ரூ.) | 2026.01.01 ஆந் திகதி தொடக்கம் (ரூ.) | 2027.01.01 ஆந் திகதி தொடக்கம் (ரூ.) |
| 1 ஆம் வருடம் | 41,317.00 | 43,274.00 | 45,230.00 |
| 2 ஆம் வருடம் | 41,689.00 | 43,730.00 | 45,770.00 |

**5.0** தென் மாகாண தொழிநுட்ப சேவையின் (வரைபடக் கலைஞர்) IIIஆம் தரத்தின் பயிலுநர் தரத்தின் பதவியானது நிரந்தமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். இந்தப் பரீட்சையில் தொழிநுட்ப உத்தியோகத்தர் (வரைபடக் கலைஞர்) IIIஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற உத்தியோகத்தர்கள் இந்தப் பதவிக்கு உரிய ஓய்வூதிய முறை தொடர்பில்

அரசினால் எதிர்காலத்தில் எடுக்கப்படுகின்ற கொள்கைரீதியான தீர்மானங்களுக்கு உட்படுதல் வேண்டும்.

**குறிப்பு 02 :-** பயிலுனர் தரத்திற்கு உள்ளெடுக்கப்படுகின்ற விண்ணப்பதாரிகள் உரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் பயிற்சிக் காலத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததன் பின்னர் தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் தேர்ச்சி பெற்றமைக்கான சான்றிதழை சமர்ப்பித்ததன் பின்னர் சேவையின் IIIஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையை சித்தியடைய தவறும் பயிலுநர்கள் இருப்பதாயின் அவர்களுக்கு 06 மாதங்களைவிட அதிகமாகாத காலத்திற்காக தங்களுடைய பயிற்சி காலத்தை நீடித்துக்கொள்ளும் சந்தர்ப்பம் உண்டு. அவ்வாறு நீடித்துக்கொள்ளப்படும் கால எல்லையின் இறுதியில் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையை தோல்வியடையும் திறந்தவெளியின் கீழ் விண்ணப்பித்த பயிலுநர்களின் சேவையை முடிவடைக்கப்படும்.

**6.0 தமைமைகள் :-** தென் மாகாண தொழிநுட்ப சேவையின் (வரைபடக் கலைஞர்) IIIஆம் தரத்தின் பயிலுனர் தரத்தின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக கீழே காட்டப்பட்டுள்ள தகைமைகளை விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் அனைத்து விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

### 6.1 III தரம்

**(அ).** கல்வித் தகைமை :-

உரிய துறைக்குரிய இரண்டு பாடங்களுடன் விஞ்ஞானம்/கணிதம்/தொழிநுட்பவியல் விடயத் துறைக்குரிய மூன்று பாடங்களில் (க.பொ.த.(உ.த) பரீட்சையில் ஒரே தடைவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

| பதவி | பிரிவு | பாடங்கள் | | |
|---|---|---|---|---|
| தென் மாகாண தொழிநுட்ப சேவையின் வரைபடக் கலைஞர் | கணிதப் பிரிவு | பௌதீக விஞ்ஞானம் | இரசாயன விஞ்ஞானம் | இணைந்த கணிதம் |
| | விஞ்ஞானப் பிரிவு | | | உயிரியல் விஞ்ஞானம் |
| | தொழிநுட்பவியல் | பொறியியல் தொழிநுட்பவியல் | தொழிநுட்பவியலுக்கான விஞ்ஞானம் | பொருளியல் |
| | | | | புவியியல் |
| | | | | மனைப்பொருளியல் |
| | | | | ஆங்கில மொழி |
| | | | | தொடர்பாடல் மற்றும் ஊடக கற்கைகள் |
| | | | | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| | | | | சித்திரம் |
| | | | | வியாபாரக் கற்கைகள் |
| | | | | விவசாய விஞ்ஞானம் |
| | | | | கணக்கியல் |

(பொருளியல் முதல் கணக்கியல் வரை) இந்தப் பாடங்களுள் ஒரு பாடத்தைக் கற்றிருத்தல் வேண்டும்

மற்றும்

கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்களம் / தமிழ்/ ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம், மற்றும் இன்னும் ஒரு பாடம் உள்ளடங்களாக ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் திறமைச் சித்திகளைப் பெற்று சித்தியடைந்திருத்தல்.

**(ஆ). தொழிற் தகைமைகள் :-**

i. மொறட்டுறை பல்கலைக்கழகத்தில் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தேசிய தொழிநுட்ப டிப்ளோமா

அல்லது

ii. தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையினால் வழங்கப்படுகின்ற பொறியியல் தேசிய டிப்ளோமா

அல்லது

iii. கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற தேசிய பொறியியல் டிப்ளோமா

அல்லது

iv. இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழிநுட்ப டிப்ளோமா.

அல்லது

v. இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற பொறியியல் பரீட்சையின் 1ஆவது பகுதியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

vi. தொழில் துறையுடன் தொடர்புடைய தேசிய தொழில் தேர்ச்சி (NVQ) 6 மட்டத்திலான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

vii. இலங்கை தொழிநுட்ப சேவைச் சபை அல்லது தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய மேலே குறிப்பிட்ட தொழிநுட்பத் தகைமைகளுக்குச் சமமான அல்லது உயர் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

## 6.2 பயிற்சித் தரம் (ஒரு வருடத்திற்கான பயிற்சிக் காலம்)

**(அ). கல்வித் தகைமை :-**

உரிய துறையுடன் தொடர்புடைய இரண்டு பாடங்கள் உள்ளடங்கலாக விஞ்ஞான (விவசாய விஞ்ஞான, உயிரியல் விஞ்ஞான மற்றும் விவசாயத் தொழிநுட்பவியல்) / கணிதம் / தொழிநுட்பவியல் விடயத் துறைக்குரிய மூன்று பாடங்களுள் க.பொ.த.(உயர் தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் சிசத்தியடைந்திருத்தல். அல்லது உரிய துறைக்குரிய பாடங்கள் உள்ளடங்கலாக தேசிய தொழிற் தகைமைகளைப் (NVQ) 4 பெற்றிருத்தல்.

மற்றும்

கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்களம் / தமிழ்/ ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம், மற்றும் இன்னும் ஒரு பாடம் உள்ளடங்களாக ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் திறமைச் சித்திகளைப் பெற்று சித்தியடைந்திருத்தல் அல்லது தேசிய தொழில் தகைமை ( NVQ) 3 பெற்றிருத்தல்.

மற்றும்

(ஆ). தொழில் தகைமைகள் :-

மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழிநுட்பக் கல்லூரியொன்றில் பதவியுடன் தொடர்புடைய துறையொன்றில் பாடநெறியொன்றைச் சிறப்பாகப் பூர்த்தி செய்து தேசிய தொழில் தகைமை (NVQ) 5 மட்டத்திற்குரிய தொழிற் தகைமையொன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

**6.3 பயிற்சித் தரம் ( இரண்டு வருட பயிற்சிக் காலம்)**

**(அ). கல்வித் தகைமைகள் :-**

கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம், மற்றும் இன்னும் ஒரு பாடம் உள்ளடங்களாக ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் திறமைச் சித்திகளைப் பெற்று சித்தியடைந்திருத்தல் அல்லது தேசிய தொழில் தகைமை ( NVQ) 3 பெற்றிருத்தல்.

மற்றும்

(ஆ). தொழிற்தகைமைகள் :-

மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழிநுட்பக் கல்லூரியொன்றில் பதவியுடன் தொடர்புடைய துறையொன்றில் பாடநெறியோன்றைச் சிறப்பாகப் பூர்த்தி செய்து தேசிய தொழில் தகைமை (NVQ) 4 மட்டத்திற்குரிய தொழிற் தகைமையொன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

குறிப்பு 03 -

i. III ஆம் தரத்திற்கு நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் பயிற்சித் தரத்தற்கு ஆட்சேர்ப்புச் செய்தல் ஆகிய இரண்டு முறைகளிலும் ஆட்சேர்ப்புச் செய்யும்போது ஆட்சேர்ப்புச் செய்யும் தரமான III ஆந் தரத்திற்கு முதலில் ஆர்சேர்ப்புச் செய்தல் வேண்டும்.

III ஆந் தரத்திற்குத் தகைமை பெறுகின்ற விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு போதுமானளவு இல்லாதவிடத்து, மீதி வெற்றிடங்களுக்கு பயிற்சித் தரத்திற்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகள் பயிற்சித் தரத்திற்கு உள்ளீர்க்கப்படுவார்கள். ( முதலில் ஓராண்டு பயிற்சி தரத்திற்கும் ஓராண்டு பயிற்சி தரத்திற்கு போதுமானதாகாத போது ஈராண்டு பயிற்சி தரத்திற்கும் ஆட்சேர்ப்பு செய்வதற்கு கவனத்திற் கொள்ளப்படும் )

**6.4** அனுபவம் :- ஏற்புடையதன்று

**6.5** வயது :- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அதாவது 2025.10.24ஆந் திகதியில் 18 வயதிற்குக் குறையாத மற்றும் 30 வயதிற்கு மேற்படாதவாறு இருத்தல் வேண்டும். (அதனடிப்படையில் 2007.10.24ஆந் திகதியில் அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1995.10.03ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் பிறந்த திகதியைக் கொண்டவர்களுக்கு மட்டும் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

**6.6** உடல் தகைமைகள் :- தென் மாகாணத்திற்குள் எந்தவொரு பிரதேசத்திலும் பணி புரிவதற்கும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்குமுரிய உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

**6.7** ஏனையவை :-

i. விண்ணப்பதாரி நிரந்தர இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
ii. விண்ணப்பதாரி சிறநத நடத்தையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
iii. பரீட்சைக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்யவேண்டிய இறுதித் திகதிக்கு முன்னரான ஐந்து வருடங்களுக்குள் (05) அவர் விண்ணப்பிக்கும் மாவட்டத்திற்குள் ஆகக்குறைந்தது மூன்று வருடங்கள் (03) வசித்தவராக இருத்தல் வேண்டும்.

அல்லது

விவாகத்தின் காரணமாக தென் மாகாணத்தில் வதிவிடம் மாறுபட்டுள்ள ஒரு விண்ணப்பதாரியெனின், பரீட்சைக்கான தகுதியை பூர்த்தி செய்யவேண்டிய இறுதித் திகதிக்கு முன்னர், துணைவரின் தென் மாகாண வதிவிடமானது விவாகமான திகதியிலிருந்து 03 பஞ்சாங்க வருடங்கள் கடந்த காலத்தில் இருத்தல் வேண்டும்.

iv. பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும் என விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு அந்தத் தகைமைகளை எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

iv. ஏதேனும் மத சபைகளில் துறவியாக உள்ள எந்வொரு நபரும் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறமாட்டார்.

**7.0** **பரீட்சை நடைமறைகள் :-** இந்தப் பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரி தமக்குரிய ஒரு மொழியைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதுடன், பரீட்சைக்குரிய அனைத்து வினாத்தாள்களுக்கும் அந்த மொழியிலேயே விடையளித்தல் வேண்டும். விண்ணப்பிக்கின்ற மொழி மூலம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சையானது இரண்டு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும்.

| பாடம் | குாலம் மணித்தியாலம் | மோத்தப் புள்ளிகள் | சித்தியடையவேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|
| நுண்ணறிவு<br>(Intelligence Quotient Test) | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| துறைசார் தொழிநுட்ப வினாப்பத்திரம்<br>(Subjective Technical Test) | 02 மணித்தியாலங்கள் | 100 | 40% |

**7.1** **பரீட்சைக்கான பாட விதானங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.**

**7.1 (அ) நுண்ணறிவு பரீட்சை**

விண்ணப்பதாரியிடம் உள்ள தர்க்கரீதியான திறன், மாற்றீடு, பொருள்கோடல், தொடர்புகளை காணுதல், மறுசீரமைத்தல், பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன், காரணம் மற்றும் விளைவு தொடர்புகளைப் புரிந்து கொள்வது, கணிப்பு, தகவல்களை ஒழுங்கமைத்தல், கோலங்களை அறிந்துகொள்ளுதல் மற்றும் அறிவுறுத்தல்களை பின்பற்றுதல் போன்ற திறன்களை அளவிடுவதற்காக தயாரிக்கப்பட்ட பல்தேர்வு வகையிலான வினாக்களைக் கொண்ட பரீட்சையாகும்.

**7.1(ஆ) துறைசார் தொழிநுட்ப வினாப்பத்திரம்**

**1.0 வரைபடக் கலை**

1.1 நிருமாணிப்பு திட்டமொன்றில் பயன்படுத்தப்படும் அங்கீகரிக்கப்பட்ட குறியீடுகள்

1.2 ஒரு திட்டத்தில் பயன்படுத்தப்படுகின்ற கணிப்பீட்டு வகைகள்

1.3 கட்டிடங்களில் அத்திவாரம் தொடக்கம் கூரை வரை குறுக்குவெட்டுமுகமான விதத்தில் வரைதல் மற்றும் தருகின்ற திட்டத்திற்கு கூரையொன்றை நிருமாணித்து முன்பக்க மற்றும் பக்க காட்சியை வரைதல்.

1.4 கொன்கிறீற் அத்திவாரத்திற்கு வலுவூட்டல் செய்வதற்கான திட்டம் (தூண் அத்திவாரம், ஸ்லாப் அத்திவாரம்)

1.5 தருகின்ற திட்டத்திற்குரிய முன்பக்க காட்சி, பக்க காட்சி, குறுக்கு வெட்டு, அத்திவாரத்தின் விபரங்கள், கதவுநிலைகள் மற்றும் யன்னல்களின் அளவுகளின் விபரங்களின் கட்டமைப்பை வரைதல்.

1.6 கட்டிடத்தின் திட்டத்தை பிரதிசெய்யும் அறிவு

**2.0 கட்டிடத்தை நிருமாணித்தல்**

2.1 கட்டிடத்திற்காகப் பயன்படுத்தப்படும் அத்திவாரத்தின் வகை, செங்கல் வேலை, கொன்கிறீற் வேலை, கூரை வகை, குழிகளை மூடுதல், கட்டிடத்தை பூர்த்தி செய்வது தொடர்பான அறிவு.

2.2 படிக்கட்டுகளை வடிவமைத்தல், கதவு, யன்னல் வகைகளை நிருமாணித்தல்.

2.3 கட்டிட நிருமாணம் தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் உள்ளூராட்சி சட்டங்கள் தொடர்பான அறிவு

**3.0 அளத்தல் மற்றும் மட்டம் எடுத்தல்**

3.1மட்டம் எடுப்பதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள், மட்டம் தாள் தயாரித்தல், மட்டம் எடுத்தல்.

3.2 நிலத்தை அளப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்ற முறைகள் மற்றும் உபகரணங்கள்

3.3 நிலத்தை அளப்பதற்கான சங்கிலி அளவீடு, தியோடோலைட் அளவீடுகள் (திறந்த / மூடப்பட்ட)

3.4 பரப்பளவு மற்றும் கனவளவு கணக்கீடு

**4.0 பொறியியல் பொருட்கள்**

4.1கட்டிட நிருமாணத்திற்காகப் பயன்படுத்தப்படும் பொருட்கள், பயன்பாடுகள் மற்றும் அவற்றின் தரம் தொடர்பான பரிசோதனை

**5.0 கட்டிட சேவைகள்**

5.1 நீர் வழங்கல், பயன்படுத்தப்படும் குழாய் வகைகள், உபகரணங்கள், வால்வுகள்

5.2 கழிவு நீர் அகற்றல், மலசலக் கழிவுநீர் அகற்றல், உயிரியல் வகைப்படுதல்.

5.3 உற்பத்தி அறைகளை வடிவமைத்தல்

5.4 வெந்நீர் கட்டமைப்புகள்

**8.0 பரீட்சை பெறுபோறுகள்** :- தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளமான **www.psc.sp.gov.lk** ஊடாக ஒவ்வொரு விண்ணப்பப்பதாரருக்கும் தனிப்பட்ட விதத்தில் தரவிறக்கம் செய்துகொள்ளக்கூடிய விதத்தில் பரீட்சைப் பெறுபேறுகள் வழங்கப்படும் என்பதுடன், பரீட்சையில் சித்தியடையும்

விண்ணப்பதாரிகளின், திறமைகளின் வரிசைப்படி தயாரிக்கப்பட்ட பெயர்ப்பட்டியலொன்று, நியமன அதிகாரிக்கு வழங்கப்படும்.

9.0 **பரீட்சைக் கட்டணம் :-** பரீட்சைக் கட்டணம் ரூ.1000/- ஆகும். நிகழ்நிலை ஊடாக (Online) பரீட்சைக்கான கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். அனைத்துக் கொடுப்பனவுகளும் **VISA** அல்லது **MASTER** அட்டை மூலமாக மட்டும் என்பதுடன், அது தவிர்ந்த பிற ஏதேனும் விதத்தில் மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகள் எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்கட்டணத்திற்கான முழுமையான தொகையையும் செலுத்த வேண்டியதுடன், பரீட்சைக் கட்டணத்தை விட குறைவாக கட்டணம் செலுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். மேற்கண்ட கொடுப்பனவு முறைகள் ஊடாக பரீட்சைக் கட்டணம் செலுத்தும்போது ஏற்படுகின்ற வழுக்கள் தொடர்பில் தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு பொறுப்புக் கூறாது.

எந்தவித காரணங்களினாலும் கொடுப்பனவு செய்யப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளக் கொடுப்பனவு செய்யப்படாது என்பதுடன், அந்தக் கட்டணமானது பிற ஏதேனுமொரு பரீட்சைக்கும் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்பதையும் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.

குறிப்பு 05: விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி வரை தாமதிப்பதன் காரணமாக ஏற்படும் எந்தவொரு பாதகமான நிலைமைகளையும் விண்ணப்பதாரியே ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

10.0 **விண்ணப்பிக்க வேண்டிய முறை:-**

அனைத்து விண்ணப்பதாரிகளும் **www.psc.sp.gov.lk** என்ற தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரவேசித்து பரீட்சையை சரியாகத் தெரிவு செய்து, உரிய தகவல்களை உள்ளடக்கி பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியதன் பின்னர் விண்ணப்பத்தை தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு (Submit) அனுப்புதல் வேண்டும். இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் காலமானது 2025 ஒக்டோபர் மாதம் 24ஆந் திகதி பி.ப.6.00 மணிக்கு நிறைவடையும். (இதற்காக இணையத்தள வசதி கொண்ட Desktop அல்லது Laptop கணனியொன்றைப் பயன்படுத்துவது மிகவும் பொருத்தமாகும்.)

10.1 விண்ணப்பதாரிகள் இந்தப் பரீட்சைக்கான தமது விண்ணப்பப்பத்திரங்களை இணையவழி ஊடாகப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

10.2 விண்ணப்பதாரியினால் உள்ளடக்கப்படுகின்ற எந்தவொரு தகவலையும் மாற்றுவதற்கு பின்னர் இடமளிக்கப்படமாட்டாது. எனவே, தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்புவதற்கு (Submit) முன்னர் அந்தத் தகவல்களை நன்கு பரிசோதித்தல் முக்கியமாகும்.

10.3 வேறு முறையில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் அறிவிக்கப்படாது நிராகரிக்கப்படும். நிகழ்நிலை ஊடாக இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது, பிழையான பரீட்சைகளைத் தெரிவு செய்தல் ஊடாக ஏற்படும் அசௌகரியங்களை நீங்களே பொறுப்பேற்க வேண்டும்.

10.4 தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு இணையவழி ஊடாக சமர்ப்பிக்கப்பட்ட (submit) விண்ணப்பப்படிவத்தை பதிவிறக்கம் (Download) செய்து அதன் வன்பிரதியை (Hard Copy) ஒக்டோபர் மாதம் 24ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழே காட்டப்பட்டுள்ள விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டியதுடன், அத்தனுடன் எந்த இணைப்பையும் அனுப்புதல் கூடாது. அந்த வன்பிரதி இடப்பட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தென் மாகாண தொழிநுட்ப சேவையின் (வரைபடக் கலைஞர்) III தரத்தின் / பயிற்சித் தரத்தின் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2025 எனக் குறிப்பிடுதல் கட்டாயமாகும்.

**செயலாளர்,**
தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
6ஆம் மாடி, மாவட்ட செயலக கட்டிடத் தொகுதி,
காலி.

10.5 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்துதல் :-
தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்படுகின்ற தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்பத்திரத்தின் வன்பிரதியில் விண்ணப்பதாரயின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். எந்தவொரு அரச நிறுவனத்திலிருந்து பரீட்சைக்குத் தோற்றும் ஒரு விண்ணப்பதாரி தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஊடாகவும், அவ்வாறு அல்லாத விண்ணப்பதாரியெனின் தமது கையொப்பத்தை அரச பாடசாலையொன்றின் அதிபர;/ ஓய்வுபெற்ற உத்தியோத்தர் / கிராமசேவகர் / சமாதான நீதவான், சத்தியம்பெற்ற ஆணையாளர், வழக்கறிஞர், பிரசித்த நொத்தாரிஸ், முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், அரச அல்லது மாகாண அரச சேவையின் நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர், பௌத்த விகாரையில் தலைமை பிக்கு, நாயக்க தேரோ, ஏனைய சமய தலங்களின் பொறுப்பு அல்லது மதத்தலைவர்கள் ஊடாக தமது கையொப்பத்தை சான்றுறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

11.0 **அனுமதி அட்டை :-**

நிகழ்நிலை ஊடாக விண்ணப்பங்கள் கோரப்படுவதால், தகைமைகள் பரீட்சிக்கப்படாது, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற முன் அனுமானத்தில் உரிய விதத்தில் பரீட்சைக் கட்டணம் செலுத்தி உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் அனைத்து விதங்களிலும் முழுமையான விண்ணப்படிவங்களை நிகழ்நிலை ஊடாக சமர்ப்பித்துள்ள அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் இந்தத் திறந்த போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தமது உத்தியோகபூர்வ இணையத்தளமான **www.psc.sp.gov.lk** ஊடாக நிகழ்நிலையில் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன் அது தொடர்பில் தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் அறிவித்தல் ஊடாக வெளியிடப்படும். அதனடிப்படையில் இணையத்தளத்தில் உள்ள பரீட்சை அனுமதி அட்டைகளை வழங்கும் பகுதிக்குள் செய்று தமது தேசிய அடையான அட்டை இலக்கத்தை உள்செலுத்துவதன் ஊடாக பரீட்சைக்கான அனுமதி அட்டையைத் தரவிறக்கம் செய்து கொள்ள முடியும். அனுமதி அட்டையை பரிசோதித்து திருத்தங்கள் இருந்தால் உரிய நிரலில் திருத்தப்படவேண்டிய விதத்தை சரியாகக் குறிப்பிட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தை இடுதல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின்போது திருத்தங்களுக்காக மேற்கொள்ளப்படுகின்ற கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்பதாரிக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் எனக் கருதுதல் கூடாது. தரவிறக்கம் செய்யப்பட்ட பரீட்சை அனுமதி அட்டையை A4 அளவிலான கடதாசியின் இரண்டு பக்கத்தையும் பயன்படுத்தி அச்சிட்டு கையொப்பத்தை சான்றுப்படுத்தி பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். எந்தவொரு அரச நிறுவனத்திலிருந்து பரீட்சைக்குத் தோற்றும் ஒரு விண்ணப்பதாரி தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஊடாகவும், அவ்வாறு அல்லாத விண்ணப்பதாரியெனின் தமது கையொப்பத்தை அரச பாடசாலையொன்றின் அதிபர் / ஓய்வுபெற்ற உத்தியோத்தர் / கிராமசேவகர் / சமாதான நீதவான், சத்தியம்பெற்ற ஆணையாளர், வழக்கறிஞர், பிரசித்திபெற்ற நொத்தாரிஸ், முப்படைகளின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், அரச அல்லது மாகாண அரச சேவையின் நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர், பௌத்த விகாரையில் தலைமை பிக்கு, நாயக்க தேரோ, ஏனைய சமய தலங்களின் பொறுப்புவாய்ந்த அல்லது மதத்தலைவர்கள் ஊடாக தமது கையொப்பத்தை சான்றுறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

12.0 **பரீட்சைக்கு உள்ளீர்த்துக் கொள்ளுதல்.**

(அ) பரீட்சைக்குத் தோற்றும் விண்ண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தை சான்றுறுதிப்படுத்திக்கொண்ட பரீட்சை அனுமதி அட்டையை, முதலாவதாக அந்த மண்டபத்தில் தோற்றும் பரீட்சைத் திகதியில், அந்தப் பரீட்சை மத்திய நிலையத்திற்குப் பொறுப்பான மண்டப மேற்பாரவையாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டார்.

(ஆ) விண்ணப்பதாரி தமக்கு குறிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**13.0 விண்ணப்பதாரியின் அடையாளம்:-**

அனுமதி அட்டை இல்லாத எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு சந்தரப்பம் வழங்கப்படமாட்டாது. மேலும், விண்ணப்பதாரிக்கு பரீட்சை மண்டபத்தில் தோற்றும் அனைத்துப் பரீட்சை வினாத்தாள்களுக்கும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருபத்திப்படும் வகையில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காக கீழே காட்டப்பட்டுள்ள ஆவணங்களுள் ஒன்றினை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்

(i.) தேசிய அடையாள அட்டை
(ii.) செல்லுபடியான வெளிநாட்டு கடவுச்சீட்டு
(iii.) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்

பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகளின் அடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்ளக்கூடிய விதத்தில் முகம் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் அணியவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, இரண்டு காதுகளையும் மூடாத விதத்தில் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய வேண்டும். அவ்வாறு தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் விண்ணப்பதாரி பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் சென்றது தொடக்கம் பரீட்சை முடிந்து வெளியே வரும்வரை முகம் மற்றும் இரண்டு காதுகளை மூடிமறைத்தல் கூடாது.

14.0 **தெரிவு செய்யும் முறை** :- இந்தப் பதவிக்கு பரீட்சையில் காட்டப்பட்ட திறமை அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற தகைமைகளைப் பரிசோதிப்பதற்கான நேர்முகப் பரீட்சையின் (புள்ளிகள் வழங்கப்படமாட்டாது) பின்னர் பொருத்தமானவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள்.

(நியமனம் வழங்கும்போது காணப்படுகின்ற வெற்றிடங்களின் அடிப்படையில் நியமனம் வழங்கப்படவேண்டிய, இறுதி முன்னுரிமை மட்டத்தில் சமமான புள்ளிகள் பெற்ற விண்ணப்பதாரிகள் பலர் இருக்கும்பட்சத்தில் நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்பட்டு கல்வித் தகைமைகளின் அடிப்படையில் உயர் தகைமைகளைக் கொண்ட நபர்கள் வரிசைப்படி தெரிவுசெய்யப்படுவர்.)

15.0 போலியான தகவல்களை வழங்குதல் :- இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எவரேனுமொரு விண்ணப்பதாரிக்கு தகைமைகள் இல்லையென அறிய வந்தால் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடக்கும்போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பத்தை இரத்துச் செய்வதற்கு தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு. மேலும், எந்தவொரு விண்ணப்பதாரியினாலும் சமர்ப்பிக்கப்படுகின்ற ஏதேனும் தகவல்கள் போலியானது என அறிந்தும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என தெரிய வந்தால் அவர் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

i. விண்ணப்பப்படிவத்தை நிரப்பும்போது மிகக் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இந்தப் பரீட்சைக்குரிய விதிமுறைகளின் அடிப்படையில் எவரேனுமொரு விண்ணப்பதாரி அதற்குத் தோற்றுவதற்குப் பொருத்தமற்றவர் என அறியப்பட்டால், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின்போது அல்லது அதற்குப் பின்னர், எச்சந்தர்ப்பத்திலேனும் அவரது விண்ணப்பத்தை இரத்துச் செய்வதற்கு இவ்வாணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

ii. விண்ணப்பதாரியால் வழங்கப்பட்ட தகவல்கள் போலியானதென பிற்காலத்தில் அறியப்பட்டால் அல்லது அவரால் ஏதேனும் விடயங்கள் வேண்டுமென்றே மறைக்கப்பட்டால் அவருக்கு நியமனம்

வழங்குதல் தொடர்பில இனியும் கருத்திற் கொள்ளப்படமாட்டாது என்பதுடன், இந்தப் பரீட்சையைக் காரணமாகக் கொண்டு வழங்கப்பட்ட நியமனமானது இரத்துச் செய்யப்படுவதற்கும், அல்லது அரச சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கும் உட்பட்டது.

**16.0** பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் விதிக்கப்படுகின்ற விதிமுறைகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவர்களாவர். அந்த சட்டதிட்டங்களை மீறினால், தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு அவர் உட்படவேண்டியேற்படும்.

**17.0** பரீட்சையை நடாத்துதல், பரீட்சையை இரத்துச் செய்தல் அல்லது பரீட்சையின் பெறுபேறுகளை இடைநிறுத்ததல் மற்றும் அதற்கு இணைவாக பரீட்சை அறிவித்தலில் ஏற்படுத்தப்படாத பிற ஏதேனுமொரு விடயம் தொடர்பில் தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும். அனைத்து விண்ணப்பதாரிகளும் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான பரீட்சை விதிமுறைகளுக்கமைய செயற்படுவதற்கு கட்டுப்பட்டுள்ளனர்.

18.0 இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கிடையே ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின், சிங்கள மொழியிலான விடயங்கள் செயல்வலுப்பெறும்.

தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் படி,

**சீ.பீ.ராஜகருணா**
செயலாளர்,
தென் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,

2025 ஒக்டோபர் மாதம் 03ஆந் திகதி,
தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
6 ஆம் மாடி,
மாவட்டச் செயலக கட்டிடம்,

காலி.

C.P. Rajakaruna
Secretary
Provincial Public Service Commission
Southern Province

(இந்த அறிவித்தலை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு நிறுவனங்களால்போலியான விதத்தில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும் அறிவித்தல்களில் குறிப்பிடப்படும் விடயங்கள் தொடர்பில் தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு எந்தவொரு பொறுப்பையும் ஏற்காது.)